ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1877/66 - 2014 අගෝස්තු මස 29 වැනි සිකුරාදා - 2014.08.29

*1877/66 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### லங்கா பட்டுன சமுத்ரகிரி விஹாரை புனித பிரதேசத்தினை புனிதபூமியாகப் பிரகடனப்படுத்தல்

*இலக்கம் 1681 கொண்ட 2010, நவம்பர் மாதம் 22 ஆம் திகதி, திங்கட்கிழமை அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1681/3 ஆம் இலக்கம் கொண்ட 2010, நவம்பர் மாதம் 22 ஆம் திகதி, திங்கட்கிழமை வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி மூலமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் பௌத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சர் கலாநிதி திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள புனித பூமி திட்டமிடல் மற்றும் அபிவிருத்தித் துறை விடயம் தொடர்பாக கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் நீண்டகால பாதுகாப்புக் கருதி அந்தப் பிரதேசத்தினை புனித பிரதேசமாகவும் அதனை "லங்கா பட்டுன சமுத்ரகிரி விஹாரை புனித பூமி" என அறிமுகப்படுத்திக்கொள்ள முடியுமெனவும் பிரகடனப் படுத்தப்படுகின்றது.*

*கலாநிதி தி. மு. ஜயரத்ன,*
*பிரதமர், பௌத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சர்.*

*பௌத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சு,*
*இலக்கம் 135, அநகாரிக்க தர்மபால மாவத்தை,*
*கொழும்பு 07,*
*2014, ஓகத்து 20.*

**அட்டவணை**

*லங்கா பட்டுன சமுத்ரகிரி விஹாரை புனித பூமி உள்ளடக்கும் பிரதேசம்*

*நிலஅளவையாளர் நாயகத்தின் 2011 மார்ச் மாதம் 25 ஆம் திகதிய இலக்கம்* Tri/ICH/2009/249A *கொண்ட திட்டவரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை நிருவாக மாவட்டத்தில், வெருகல் பிரதேச செயலகப் பிரிவில், கொட்டியார் பற்று பிரிவின், சீனன்வேலி கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கீழ் குறிப்பிடப்படும்* I *ஆம் பகுதி,* II *ஆம் பகுதிகளில் அமைந்துள்ள 9.3214 ஹெக்டேயார்ஸ் பரப்பளவு கொண்ட கீழ் குறிப்பிடப்படும் எல்லைகளைக் கொண்ட முழுப் பிரதேசம்.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

I ஆம் பகுதி

**துண்டு இலக்கம்** C

வடக்கு : துண்டு இலக்கம் 1 BZ,TRI/SRW/2003/248 கொண்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பாதை மற்றும் கடல்;

கிழக்கு : கடல்;

தெற்கு : BZ மற்றும் துண்டு இலக்கம் D;

மேற்கு : TRI/ICH/2003/248 கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் B மற்றும் D, TRI/SRW/2003/248 கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் BZ.

IIஆம் பகுதி

**துண்டு இலக்கம்** D

வடக்கு : கடல், கடல் நெடுகிலும் ஒதுக்கப்பட்டுள்ள காணிப் பகுதி (துண்டு இலக்கம் A) மற்றும் துண்டு இலக்கம் B மற்றும் C;

கிழக்கு: துண்டு இலக்கம் C மற்றும் கடல்;

தெற்கு : கடல்;

மேற்கு : கடல் மற்றும் பாதை.

*09-489*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.